வனத்துறையினர்மீது கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில் நானே பல வழக்குகளை மலைவாழ் மக்களுக்காக தொடுத்துள்ளேன், எனவே அரசு அந்த நிலங்களைக் கைப்பற்றி. மீண்டும் அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனல்காடு என்பது மலைவாழ் மக்கள் இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒரு முறை பயிர் செய்து விட்டு, வேறு இடத்திற்கு மாறி விடுகிறார்கள், அது வனத் துறைக்குச் சொந்த இடமாக இருக்கின்ற காரணத்தாலும், வனத்துறை அதிலே பல்வேறு பழத் தோட்டங்களை வளர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தாலும். குறிப்பிட்ட இடங்களிலே மலைவாழ் மக்களை அனுமதிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, அதைத்தான் கருத்திலே கொண்டு, அந்த மலைவாழ் மக்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற வகையிலே தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். 10,000 எக்டேர் நிலப் பரப்பிலே அந்த நிலங்களைத் தேர்வு செய்து, ஒரு குடும்பத்திலே இருக்கின்ற அதாவது இரண்டு பேர், அல்லது மூன்று பேர் இருந்தாலும், அது குடும்பம் என்ற முறையில் இரண்டு எக்டேர் நிலங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 502. திரு. கே. கந்தசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

502—

தம்மம்பட்டியில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை.

*8090—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை (Depot) தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1992 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்மம்பட்டியில் பணிமனை அமைத்தால், கங்கவல்லி ஒன்றியத்திலுள்ள பல கிராமங்கள் பஸ் வசதியைப் பெறும். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து தம்மம்பட்டியில் பணிமனை ஏற்படுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்மம்பட்டி என்கின்ற இடத்தில் இப்போது அதற்காக 8 நகரப் பேருந்துகளும், இரண்டு புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. சேலம், ஆத்தூர், ராசிபுரம், வாழப்பாடி போன்ற இடங்களிலிருந்து 6 புறநகர்ப் பேருந்துகளும், ஒரு டவுன் பேருந்தும் இயக்கப்படுகின்ற காரணத்தினாலே அந்த பகுதியிலே பணிமனை இப்போது தேவையில்லை என்று அரசு கருதுகின்றது.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளை விடுகின்றபோது '' சர்வ்டு ஏரியாவிற்கு '' 30 கிலோ மீட்டர் தூரம் என்றும், '' அன் சர்வ்டு ஏரியாவிற்கு '' 35 கிலோ மீட்டர் தூரம் என்றும் வரையறை நிர்ணயித்திருக்கிறார்கள். இப்போது பணிமனை ஆத்தூரில் மட்டுமே இருக்கிறது. ஆத்தூரிலிருந்து 30 கிலோ மீட்டர் என்ற கணக்கிலேதான் தம்மம்பட்டிக்கு பஸ் வசதி கிடைக்காமல் போய்விடுகிறது. எனவே, தம்மம்பட்டி ஏரியாவில் பணிமனை ஏற்படுத்தினால், தம்மம்பட்டியிலிருந்து 30 கிலோ மீட்டர் என்று கணக்கிட்டு பல கிராமங்கள்—மலை வாழ் மக்கள் வசிக்கும் கிராமங்கள் பலவும் பஸ் வசதியினைப் பெறும். எனவே, இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டிருப்பது தம்மம்பட்டி என்ற இடத்தில் ஒரு பணிமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 30 கிலோ மீட்டர் அளவிலேதான் நான் குறிப்பிட்ட இடங்களிலே, சேலம், ஆத்தூர், ராசிபுரம், வாழப்பாடி போன்ற இடங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்ற காரணத்தால் அனைத்துப் பகுதிகளிலும் 30-லிருந்து 35 கிலோ

மீட்டர் தூரம் வரையிலும் இப்போது நாம் நகரப் பேருந்து களை இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பின ரவர்கள் குறிப்பிடுவதைப் போல அந்தப் பணிமனை அமைப்ப தற்கு இப்போது சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தாலும்கூட, உறுப்பினரவர்கள் எந்தெந்த பகுதிகளுக்கு நகரப் பேருந்து விடவேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்தால், நம்முடைய தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவி திட்டத்தின் அடிப் படையில் 1992-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளே அனைத்துப் பேருந்துகளும் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 538, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

538—

மல்லசமுத்திரம் பகுதியில் நூற்பாலை அமைத்தல்

*1564—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரம் பகுதியில் நூற்பாலை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 25,000-க்கும் அதிகப்பட்ட நெச வாளர் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டத்தை வரும் ஆண்டிலாவது பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், அம்மாப்பேட்